வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461 - 2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press Release: 14 Date : 11.01.2023

## International luxury Cruise ship calls VOC Port, Tuticorin

International luxury Cruise ship 'MS Amera' made her first call to V.O.C Port, Tuticorin, on Wednesday the 11th January, 2023, carrying 698 passengers and 386 crew members on-board.

The guests onboard 'MS Amera' were traditionally welcomed with 'Nathaswara Mangala Isai' and folk dance, at the Additional Berth of the Port. All infrastructure facilities were arranged for Immigration Department, Customs and Port Health Organisation, by the Port Authority to ensure seamless arrival & departure of the guests and to make the trip a memorable experience.

To Honour the maiden call of the Cruise vessel, Mr. T.K. Ramachandran, IAS, Chairman, V.O.C Port Authority, and the Captain of the vessel 'MS Amera', Capt. Hubert Flohr, exchanged the commemorative plaques in a function at the Berth.

The Bahamas flagged 'MS Amera', with a length of 204 Metre and maximum air draft of 44.8 metres, has 13 decks and 413 cabins with capacity to transit 835 passengers, is capable of travelling at maximum speed of 20.5 Knots ( 38 km/h). The Ship operated by Bernhard Schulte Cruise Services, Germany, has three restaurants, Show-Lounge, Library, Sports, Beauty & Wellness area, and Swimming pools.

The passengers were predominantly from Germany, Austria, Italy, Switzerland. In addition, 5 passengers have also embarked from Tuticorin. Around 70 tourists went to Tirunelveli to visit Holy Trinity Church and Nellaiappar Temple and more than 200 tourists visited Lady of Snows Church and other places of interest at Tuticorin. Local Guides were also arranged through Ministry of Tourism.

Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O.C Port Authority, in his message conveyed that "We are delighted to welcome 'MS Amera' on its Maiden call to VOC Port, Tuticorin. Considering the various tourist attractions and idyllic destinations in this southern part of the Tamilnadu, the Port is working with various cruise operators to increase such cruise vessel calls to VOC Port, Tuticorin, in the near future".

The Vessel Agent M/s. JM Baxi, thanked the Port Authorities and officials for ensuring a well co-ordinated and smooth dis-embarkation and embarkation of the tourists and for safe handling of the cruise vessel on par with international standards.

The cruise that started from the Port of Nice, France on 22.12.2022, travelled through various Ports in Malta, Egypt, and Oman, had reached Mumbai on 08.01.2023, and called

at Cochin on 10.01.2023. and Tuticorin on 11.01.2023. The vessel left VOC Port at 19.00 Hrs. on 11.01.2023 for Colombo and further eastwards. The Cruise 'MS Amera' is on a 125 day World Cruise from Nice (France) to Bremerhaven (Germany) from 22/12/2022 to 26/04/2023, covering 25 Countries around the world.

Shri Bimal Kumar Jha, Deputy Chairman, VOC Port Authority, Shri M. Radhakrishnan, DSP, Immigration Department, Shri T.Siddharthan, Deputy Commissioner, Customs, Dr. P.Poornima, Port Health Officer, Shri. R. Pabakar, Traffic Manager, Capt. Praveen Kumar Singh, Deputy Conservator, Shri K. Ravikumar, Chief Engineer, Shri V.Suresh Babu, Chief Mechanical Engineer, Shri Giriraj Singh Rathod, Secretary, and other senior officials also were present.

The above details were released in a Press-Release by V. O. Chidambaranar Port Authority, today.

PUBLIC RELATIONS OFFICER

Tele Fax : 0461 - 2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி எண் :14 தேதி : 11.01.2023

## சர்வதேச சொகுசு கப்பல் எம். எஸ். அமிரா வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திற்கு வருகை

எம். எஸ். அமிரா (M.V. Amera) என்ற சர்வதேச சொகுசு கப்பலில் சுமார் 698 பயணிகளையும் 386 கப்பல் பணியாளர்களையும் ஏற்றிக்கொண்டு 11 ஜனவரி 2023 புதன்கிழமை அன்று முதன் முறையாக வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை வந்தடைந்தது.

வ.உ.சிதம்பரனார் துறைமுக கப்பல்தளம் 5-ல் எம். எஸ். அமிரா பயணிகள் கப்பலில் பயணித்த விருந்தினர்களை பாரம்பரிய இசையான "நாதஸ்வர மங்கள இசை" இசைத்து மற்றும் நாட்டுப்புற நடனம் ஆடி வரவேற்கப்பட்டனர். இக்கப்பலில் வந்த வெளிநாட்டு பயணிகளை கையாளுவதற்கு சுங்கத்துறை, குடியுரிமை மற்றும் பொது சுகாதார அலுவலகங்களுக்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் செய்திருந்தது. கப்பலின் சுற்றுலா பயணிகள் வருகை மற்றும் புறப்பாடு செயல்பாடுகள் எந்தவொரு தங்கு தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்வது மட்டுமல்லாமல் பயணிகள் துறைமுக வருகை மறக்க முடியாத அனுபவமாக இருப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

திரு தா.கி. ராமச்சந்திரன்., இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் எம். எஸ். அமிரா என்ற கப்பலின் கேப்டன் கீயூபர்ட் வோலோயும் (Capt. Hubert flohr) அவரவர் பாரம்பரிய நினைவுச்சின்னங்களை பரிமாறிக் கொண்டனர்.

மேற்கு இந்திய பஹாமாஸ் தீவு கொடியுடன் வந்த எம். எஸ். அமிரா என்ற பயணிகள் கப்பலானது 204 மீட்டர் நீளமும், அதிகபட்சம் 44.8 மீட்டர் காற்று வரைவு, 13 அடுக்குகள் மற்றும் 413 தங்கும் அறைகளுடன், 835 பயணிகளைக் கொண்டு செல்லும் திறன் கொண்டது. இக்கப்பல் அதிகபட்சமாக 20.5 நாட்ஸ் (Knots) (38 ஒருமணி நேரத்திந்கு ) வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது. ஜெர்மனியிலுள்ள பெர்ன்ஹார்ட் ஷீல்ட் பயணிகள் சேவை (Bernhard Schulte Cruise Service) மூலம் இயக்கப்படும் இப்பயணிகள் கப்பலில் மூன்று உணவங்கள், ஓய்வறைகள், நூலங்கள், விளையாட்டு, அழகு மற்றும் ஆரோக்கியத்திற்காக அறைகள் மற்றும் நீச்சல் குளங்கள் அமைந்திருப்பது சிறப்பம்சம் ஆகும்.

இக்கப்பலில் பயணம் செய்யும் பயணிகள் பெரும்பாலும் ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். மேலும், வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து மார்க்கமாக கூடுதலாக 5 பயணிகள் இக்கப்பலில் பயணம் மேற்கொண்டனர். அவர்களில் சுற்றுலா பயணிகள் 70 பேர் திருநெல்வேலியிலுள்ள புனித திரித்துவ தேவாலயம் மற்றும் நெல்லையப்பர் கோயிலுக்கும், 200க்கு மேற்ப்பட்ட சுற்றுலா பயணிகள் தூத்துக்குடியில் உள்ள 450 ஆண்டுகள் பழமையான புனித பனிமய அன்னை பேராலயம் (Our Lady of Snows Basilica) மற்றும் தூத்துக்குடி

பகுதியிலுள்ள மற்ற இடங்களுக்கு சென்றனர். சுற்றுலா அமைச்சகத்தின் மூலம் உள்ளூர் வழிகாட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுந்தனர்.

திரு தா.கி. ராமச்சந்திரன்., இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள், தனது செய்தி குறிப்பில் எம். எஸ். அமிராவின் முதல் அழைப்பை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறினார். மேலும் தென்தமிழகத்தின் மையமாக கொண்டு பல்வேறு சுற்றுலா தலங்கள் அமைந்திருப்பதை கருத்தில் கொண்டு, இது போன்ற பயணிகள் கப்பல் வருவதினால் வருங்காலங்களில் பல்வேறு பயணிகள் கப்பல் இயக்குபவர்களுடன் துறைமுகம் இணைந்து தூத்துக்குடியில் பல்வேறு சுற்றுலா பயணிகள் வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்று கூறினார்.

சர்வதேச வசதிகளுடன் கூடிய சொகுசு கப்பல்களை பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கும் இக்கப்பலுள்ள சுற்றுலா பயணிகள் இறக்கம் மற்றும் ஏற்றம் செயல்பாடுகள் சரியான முறையில் நடைபெறுவதற்கும் உறுதுணையாக இருந்த துறைமுக அதிகாரிகளுக்கு இக்கப்பலின் முகவர்கள் ஜெ.எம். பக்ஹி அன் கோ (J.M Baxi & Co) தூத்துக்குடி நிறுவனம் தனது நன்றியை தெரிவித்து கொண்டது.

இந்த பயணிகள் கப்பலானது நைஸ்- பிரான்ஸ் (Nice - France) நாட்டில் இருந்து 22.12.2022 அன்று புறப்பட்டு மால்டா - எகிப்து - ஓமன் நாடுகள் மார்க்கமாக பயணத்தை மேற்கொண்டு மும்மை துறைமுகத்தை 08.01.2023 அன்று வந்தடைந்தது. மேலும் கொச்சி துறைமுகத்திற்கு 10.01.2023 வந்தடைந்து வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை 11.01.2023 அன்று வந்தடைந்தது. மீண்டும் இப்பயணிகள் கப்பலானது 11.01.2023 மாலை 1900 மணியளவில் கொலும்பு துறைமுகதிற்கு தனது பயணத்தை துவங்கும். இப்பயணிகள் கப்பலானது (Nice - France) நாட்டில் இருந்து 22.12.2022 அன்று புறப்பட்டு இறுதியாக 26.04.2023 அன்று ஜெர்மனி நாட்டை வந்தடையும். இப்பயணிகள் கப்பலானது 125 நாட்கள் பயணம் மேற்கொண்டு 25 நாடுகளை சுற்றி பார்ப்பதற்காக முடிவு செய்துள்ளது.

திரு. பிமல்குமார் ஜா, துணைத் தலைவர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், திரு. எம். ராதாகிருஷ்ணன்,இ.கா.ப., துணை மாவட்ட கண்காணிப்பாளர், கடல்துறைமுக குடியேற்றம், திரு டி.சித்தார்தன், இணை ஆணையர், சுங்கத் துறை, டாக்டர் பி. பூர்ணிமா, துறைமுக பொது சுகாதார அதிகாரி, திரு ஆர். பிரபாகர், போக்குவரத்து மேலாளர், கேப்டன் பிரவீன்குமார் சிங், துணை பாதுகாவலர், திரு.கே. ரவிக்குமார், தலைமை பொறியாளர், திரு.வி. சுரேஸ் பாபு, தலைமை இயந்திர பொறியாளர், திரு. அசோகா குமார் சாகு, நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அதிகாரி, திரு. கிரிராஜ் ரத்தோடு, செயலர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மற்றும் மற்ற மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியீட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி